## கூடுதல் மாவட்ட நீதிமன்றம், அருப்புக்கோட்டை.

## அ.வ.எண். 85 /2025

வாதி தரப்பு 1வது சாட்சி சரவணன் என்பவரின் வாக்குமூலம் ( 1869 ஆண்டு சாட்சிய சட்டம் 44 வது பிரிவு 6 வது விதியின் ஏற்பாட்டின் படி ஆணையிட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சரவணன் | சாதி | : | |
| தகப்பனார் பெயர் | : | சந்திரசேகரன் | சமயம் | : | இந்து |
| கிராமம் | : | அருப்புக்கோட்டை | தொழில் | : | வியாபாரம் |
| தாலுகா | : | அருப்புக்கோட்டை | வயது | : | 48 |

நாள் : 13.07.2026.

வா.சா. 1 – சரவணன்

**முதல் விசாரணை :–**

நான் இந்த வழக்கில் வாதி தரப்பு சங்கத்தின் செயலாளராக பதவி வகித்து வருகிறேன். எனது தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை எனது தரப்பு சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. **வா.சா.ஆ.1** – சங்க உப விதிகள் கையேட்டின் அசல்

2. **வா.சா.ஆ.2** – அருப்புக்கோட்டை கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற O.S.No.128/2024 வழக்கின் வழக்குரையின் சார்பு நகல்

3. **வா.சா.ஆ.3** – 04.03.2026 ம் தேதியிட்ட அருப்புக்கோட்டை கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற O.S.No.128/2024 வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல்

4. **வா.சா.ஆ.4** – 30.09.2020 ம் தேதியிட்ட சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை W.P.(MD) No.13131/2020 ஏற்பட்ட உத்தரவின் இணைய நகல்

5. **வா.சா.ஆ.5** – 12.09.2023 ம் தேதியிட்ட சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை W.P.(MD) No.19595/2020, W.P.(MD) No.18872/2022, W.P.(MD) No.2572/2020 ல் ஏற்பட்ட உத்தரவின் இணைய நகல்

6. **வா.சா.ஆ.6** – 05.05.2024 ம் தேதியில் 2024 – 2027 காலத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகள் சம்பந்தமான அறிவிப்பின் நகல்

7. **வா.சா.ஆ.7** – 10.03.2025ம் தேதியிட்ட 06.05.2024ம் தேதியில் 2024–2027 காலத்திற்கு செயலாளர் தேர்ந்தெடுக்கப்பட்டப் பட்டதற்கான படிவம் 7ன் சான்று நகல்

8. **வா.சா.ஆ.8** – 11.10.2024ம் தேதியிட்ட வாதி உறவின்முறை தரப்பில் 3ம் பிரதிவாதிக்கு கொடுக்கப்பட்ட அறிவிப்பின் அலுவலக நகல்

9. **வா.சா.ஆ.9** – 22.11.2024ம் தேதியிட்ட 3ம் பிரதிவாதி எழுதி கொடுத்த கடிதத்தின் அசல்

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :–**

பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

இத்திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VASANTHA KUMAR
Digitally signed by M VASANTHA KUMAR

கூடுதல் மாவட்ட நீதிபதி
அருப்புக்கோட்டை.